**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மானாமதுரை**
**ஓ.எஸ்.104/2017**
**2026 – ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 – ம் நாள் வெள்ளிக் கிழமை**
**வாதி – பிரதிவாதிகளின் சாட்சியின் வாக்குமூலம். 1869 ம் ஆண்டு சட்ட எண். 44 வது பிரிவு 6 (1) ன் படி கிரேடு III பெஞ்ச் கிளார்க் திரு.பி.இளங்கோவன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **சிவக்குமார்** | **சாதி** | : | |
| **த/பெ** | : | | **சமயம்** | : | |
| **கிராமம்** | : | | **தொழில்** | : | |
| **வட்டம்** | : | | **வயது** | : | |

**பி.வா.சா. 3 ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் பிரதிவாதி தரப்பில் 3 வது சாட்சியாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என் தரப்பில் பிரமாண நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்களை படித்துப் பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்குத் தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்யப்படவில்லை.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க யார் அழைத்து வந்தார் என்று கேட்டால் 1 ம் பிரதிவாதி கயல்விழி அழைத்து வந்தார். வழக்கு பற்றிய விபரங்களை 1 ம் பிரதிவாதி கயல்விழி தான் சொன்னார் என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ 14 கிரய ஆவணத்தை எழுதிக்கொடுத்த ராக்கு என்பவர் என் தாயார் ஆவார். பி.வா.சா.ஆ 14 கிரய ஆவணத்தில் நான் 3 வதாக சாட்சி கையொப்பம் செய்துள்ளேன்.

எனக்கு எழுதப்படிக்கத் தெரியும். பி.வா.சா.ஆ 14 கிரய ஆவணத்தில் என் தாயார் 1 ம் பிரதிவாதி கயல்விழிக்கு எழுதிக்கொடுத்த சொத்தின் சர்வே எண் 149/6 ஏ என்று எழுதியுள்ளது என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 9 ஆவணத்தில் என் தாயார் ராக்கு பெயரில் உள்ள பட்டா எண் 450 ல் சர்வே எண் 149/6 ஏ என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 4 ஆவணத்தில் புல எண் 149/6 ஏ பட்டா எண் 450 ராக்கு பெயரிலும், புல எண் 149/6 பி பட்டா எண் 451 ல் வள்ளி பெயரிலும் உள்ளது என்றால் சரிதான்.

வள்ளி என்பவரும் என் தாயார் ராக்குவும் உடன் பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். நான் பிறந்த போது 47 வருடங்களுக்கு முன்பு வாங்கிய சொத்து ஆகும். ஆதிபுல எண் 149/6 ஐ என் தாயார் பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணங்கள் மூலம் கிரயம் வாங்கினாரா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

ராஜாமணி, கயல்விழி வகையறாவினருக்கும் எப்போதில் இருந்து பிரச்சினை நடந்து வரும் விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 2-3 வருடங்களுக்கு முன்பு தான் தெரியும்.

தாவா சொத்தை 2 -3 வருடங்களுக்கு முன்பு மாண்பமை உயர்நீதிமன்ற உத்தரவின்படி வருவாய் துறையினர் அளந்தவிபரமும் தற்போது சமூகம் நீதிமன்ற உத்தரவின் பெயரில் நீதிமன்ற ஆணையாளர் மூலம் தாவா சொத்தை வருவாய் துறையினர் அளந்த விபரமும் தெரியுமா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள பட்டா எண் 390 ஐ பற்றிய விபரம் எனக்குத் தெரியாது. அந்த பட்டாவில் யார் யார் பெயர்கள் உள்ளது, அது எவ்வளவு விஸ்தீரணத்திற்கு உரியது என்ற விபரமும் எனக்குத் தெரியாது.

தாவா சொத்தின் சர்வே எண் தெரியாது. கேணி மோட்டார் உள்ள இடத்திற்க வழக்கு நடைபெறுகிறது என்று தெரியும். மேற்படி கேணி மோட்டார் ஆதியில் புல எண் 149 ல் இருந்தது. தற்போது எந்த சர்வே எண்ணில் கேணி மோட்டார் உள்ளது என்று கேட்டால் தெரியாது.

வழக்கு பற்றிய எந்த விபரமும் உங்களுக்கு தெரியாது என்றும் கயல்விழி உங்களுக்கு வேண்டப்பட்டவர் என்பதால் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வழக்கு நடைபெறும் சொத்தான புல எண் 149/6 பி ஐ என் பெரியம்மா வள்ளி என்பவரிடம் இருந்து வாதி சரியான பிரதிபிரயோனத்திற்கு கிரயம் வாங்கி தற்போது வரை வாதி தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

-Sd-

Taken down by me in open court
readover/interpreted to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

-Sd-
District Munsif,
Manamadurai.